# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 13)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)

மாகாண சபைகள் நியதிச் சட்டம் இல. 42 / 1987 பற்றி பெரிதாக ஆராய எதுவுமில்லை. அது மாகாண சபை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது அமர்வுகள் கூடுவது விடயதானங்களை விவாதித்து இறுதி முடிவெடுப்பது அதற்கு தேவையான நிதி சம்பந்தமானவை பற்றியும் வேறும் அதன் ஊழியர்களின் நியமனம் இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கை பதவி நீக்கம் போன்ற அதிகாரங்கள் மாகாண சபை அமைப்பு நடைமுறைகள் பற்றியவையாகவே காணப்படும்.

**2ம் குடியரசு அரசியலமைப்பின் 13வது. திருத்தம்.**

1978ம் ஆண்டைய அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் மூல அரசியலமைப்புச் சட்டத்தின் 18ம் : 138ம் மற்றும் 154ம் உறுப்புரைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதன் மூலம் உருவாக்கப்பட்டது.

**மொழி என்ற IV அத்தியாயத்தில் உறுப்புரை 18** இவ்வாறு கூறுகின்றது. “ இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்”. இது செய்யப்பட்ட 13வது திருத்தத்தால் “தமிழும் அரசகரும மொழி ஒன்றாதல் வேண்டும்”. என்றும் “ ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும்”. எனவும் மாற்றம் அடைந்துள்ளது. (இதனால் 1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு பின் 1வது குடியரசு அரசியலமைப்பில் (1972) உள்வாங்கப்பட்ட ‘சிங்களம் மட்டும்’ சட்டம் இந்த 13வது திருத்தத்தின் மூலம் வலுவற்றதாக ஆக்கப்பட்டுள்ளது.)

**மேனிலை நீதிமன்றங்கள் என்ற XVI அத்தியாயத்தில் உறுப்புரை 138 :** திருத்தப்படுவதன் மூலம் ‘முதனிலை நீதிமன்றத்தாலும்’ என இருந்ததை ‘முதனிலை நீதிமன்றத்தாலும் மேல் நீதிமன்றம் அதன் மேன்முறையீட்டு அல்லது தொடக்க நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும்போது மேல் நீதிமன்றத்தாலும்’ என்பதாக மாற்றப்பட்டுள்ளது. மற்றுமொரு திருத்தமாக ‘அத்தகைய நீதிமன்றம்’ என்ற சொற்கள் முதனிலை நீதிமன்றத்தையும் மேல் நீதிமன்றத்தையும் குறிக்கும் எனக் கொள்ளப்பட வேண்டும். (இது மேன்முறையீட்டு நீதிமன்றுக்குள்ள நியாயாதிக்கத்தை கூறுகையில் மேல் நீதிமன்றமும் முதனிலை நீதிமன்றமாக வெளிகாட்டும் சந்தர்ப்பத்தை விளக்குகின்றது.)

**154ம். உறுப்புரையினை உடனடுத்து XVII அ என்னும் ஒரு புது அத்தியாயத்தை உட்புகுத்திச் சேர்த்து “மாகாண சபைகள்” பற்றிய சட்ட ஏற்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவை 154அ தொடக்கம் 154ந வரையிலான உறுப்புரைகளைக் கொண்டதாகவுள்ளது.**

**உறுப்புரை 154அ : மாகாண சபையை தாபித்தல்**

இந்த உறுப்புரையின் மூலம் கூறுவதாவது (1). அரசியலமைப்பில் புதிதாக சேர்க்கப்பட்ட 8வது அட்டவணையில் மாகாண சபைகள் அமைக்ககூடிய இலங்கையிவுள்ள ஒன்பது மாகாணங்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் பிரகாரம் அதில் அவரால் குறிக்கப்படும் தேதியிலிருந்து அந்தந்த மாகாண சபைகள் தாபிக்கப்படும் என உள்ளது. (2). இவ்வாறு தாபிக்கப்படுவதற்கு முன் மாகாண சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கென உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி தேர்தலை நடத்தி உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. (3). அருகருகாமையிலுள்ள மாகாணங்கள் இரண்டோ அல்லது மூன்றோ இணைந்த ஒரு மாகாண சபையை உருவாக்குவதாயினும் அங்கு ஒரு ஆளுநர் ஒரு பிரதான அமைச்சர் ஒரு அமைச்சரவை கொண்ட ஒரு நிருவாகப்பிரிவாகவோ அல்லது தனித்தனி மாகாணமாக ஒரு ஆளுநர் ஒரு பிரதான அமைச்சர் ஒரு அமைச்சரவையாகவோ அமையவேண்டும் என்பது சார்பாக அதற்கு ஏற்றவாறான சட்டத்தால் பாராளுமன்றம் ஏற்பாடு செய்யலாம்.

**உறுப்புரை 154 ஆ   ஆளுநர்**

இந்த உறுப்புரையின் மூலம் கூறப்படுவது: (1) ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு ஆளுநர் இருத்தல் வேண்டும். (2). ஆளுநர் ஜனாதிபதியால் தன்கைப்பட எழுதப்பட்ட ஆணை மூலம் நியமிக்கப்படுவார். (3). ஆளுநர் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்து பதவியிலிருந்து விலகலாம் (4). ஆளுநர் ஒருவர் அரசியலமைப்பின் செயற்பாடுகளை வேண்டுமென்று மீறியுள்ளார் என்றோ அல்லது அவரின் பதவிக்குரிய தத்துவத்துவங்களில் பிறழ் பிரயோகத்தை ஏற்படுத்தும் துர்நடத்தைக்கு உட்பட்டுள்ளார் என்றோ அல்லது ஊழலுக்கு சம்பந்தப்பட்டு உள்ளார் என்றோ அல்லது இலஞ்சம் பெறும் தவறுக்கு உட்பட்டுள்ளார் என்றோ அல்லது ஒழுக்கக்கேட்டை உட்புடுத்தும் தவறுக்கு குற்றவாளியாக உள்ளார் என்றோ மாகாண சபையில் பிரேரணையாக முன்வைத்து அதற்கு சார்பாக சபையில் சமூகமளிக்காதோர் உட்பட மூன்றில் இரண்டு உறுப்பினர்கள் ஆதரவளிப்பதன் மூலம் ஆளுநரை விலக்குமாறு ஜனாதிபதியை வேண்டலாம். ஆனால் அவ்வாறான தீர்மானத்தை சபையில் எடுத்து விவாதிப்பதற்கு சபை உறுப்பினர்களில் அரைவாசி உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அதைத் தவிசாளருக்கு சமர்ப்பித்தால் மட்டுமே சபையில் அது பற்றி கலந்துரையாடி தீர்மானிக்கலாம் எனக் கூறுகிறது.

(5). ஆளுநர் ஒருவர் அவர் பதவி ஏற்ற திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவியில் இருக்கலாம். (6). ஆளுநர் ஒருவர் பதவி ஏற்கும்போது 6வது திருத்தத்திற்கு அமைய அட்டவணை 4இல் உள்ள வாசகத்தை வாசித்து சத்தியம் செய்தோ உறுதியுரை வழங்கியோ கையெழுத்திட்டு பதவியை ஏற்கவேண்டும். (7). பதவி ஏற்ற ஒரு ஆளுநர் அன்றிலிருந்து வேறு இலாபமீட்டும் இலாபமீட்டாத எந்த பதவியையோ வகித்தல் ஆகாது. (8). ஆளுநர் தான் பொருத்தமானதெனக் கருதும் திகதியிலும் இடத்திலும் மாகாண சபையை கூட்டுமாறு அழைக்கலாம். ஆனால் அத் திகதி முடிந்த கடைசி அமர்வுக்கு இரண்டு மாதங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும். ஆளுநரால் எப்போதாவது மாகாண சபையின் அமர்வை நிறுத்தலாம். ஆளுநர் மாகாண சபையைக் கலைக்கலாம். ஆளுநர் பிரதான அமைச்சரின் ஆலோசனையின் மீது அல்லது தனது சொந்த அபிப்பிராயப்படி அமைச்சரவையானது மாகாண சபையின் பெரும்பான்மை ஆதரவை பெற்றிருக்கும் வரை தனது தத்துவங்களைப் பிரயோகிக்கலாம். (9). மன்னிப்பு வழங்குவதற்கான ஜனாதிபதியின் தத்துவங்களுக்கு பங்கமின்றியும் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைவாகவும் ஆளுநர் மாகாண சபையினால் ஆக்கப்பட்ட நியதிச்சட்டம் தொடர்பிலான தவறு இழைத்தவருக்கு அல்லது அதே விடயதானம் சம்பந்தமாக பராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டம் தொடர்பில் தவறு செய்ததன் மூலம் குற்றம் சாட்டப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு மன்னிப்பு வழங்கவும் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தை தாழ்த்தவும் அல்லது தளர்த்தவும் தத்துவத்தைக் கொண்டவராக இருப்பார். இருப்பினும் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையுடன் உடன்படாதபோதும் அவரின் கருத்துப்படி பொது நலன் கருதி அவ்வாறு செய்ய அவசியம் எனுமிடத்து அத்தகைய விடயத்தை கட்டளைக்காக ஜனாதிபதிக்கு ஆற்றுப்படுத்தலாம். (10). ஆளுநர் மாகாண சபையில் உரையாற்ற தத்துவம் கொண்டவர். அத்தகைய உரையாற்றும் அமர்வுக்கு உறுப்பினர்களின் வருகையை தேவைப்படுத்தவும் நடவடிக்கையை எடுக்கலாம். ஆளுநர் முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டம் தொடர்பாகவோ அல்லது வேறு விடயத்திற்கோ மாகாண சபைக்கு செய்திகளை அனுப்பலாம் என்பதுடன் மாகாண சபை அச்செய்திகளை கவனத்திற்கெடுத்து பரிசீலனை செய்வதும் அதில் தேவைப்படுத்தப்பட்ட விடயம் சார்பாக விரைவாகவும் திருப்திகரமாகவும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறுகிறது.

**பிரதான அமைச்சர்**

(11). ஒவ்வொரு மாகாணத்திற்கான பிரதான அமைச்சரின் கடமைகளாக:
அமைச்சர்கள் சபையின் சகல முடிபுகளையும் சட்டவாக்கத்திற்கான உத்தேசங்களையும் ஆளுநருக்கு தெரியப்படுத்துதல் அவ்வாறான விடயங்கள் சார்பாக ஆளுநர் கோரக்கூடிய தகவல்களை கொடுத்துதவுதலும் அமைச்சர் ஒருவரினது முடிவு அமைச்சர் சபையினால் சீர்தூக்கிப் பார்க்கப்படாதது காணப்படுமிடத்து அதை அமைச்சர் சபைக்கு சமர்ப்பிக்க ஆளுநர் கேட்டுக் கொண்டால் அவற்றை அவ்வாறு சமர்ப்பித்தலும் வேண்டும்.

(12). ஆளுநர் பதவிக்கான சம்பளம் படிகள் ஓய்வு பெறும் வயது ஓய்வூதிய உரித்துக்கள் ஆகிய

விடயங்களுக்கு பாராளுமன்றம் சட்டத்தின் மூலமோ அல்லது தீர்மானத்தின் மூலமோ ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**உறுப்புரை 154 (இ). ஆளுநர் நிறைவேற்றுத் தத்துவங்களை பிரயோகித்தல்**

ஒரு மாகாண சபைக்கு என்னென்ன விடயங்கள் சார்பாக நியதிச் சட்டங்களை உருவாக்க தத்துவம் உள்ளதோ அவ்விடயங்களை உள்ளடக்கும் நிறைவேற்றுத் தத்துவம் அந்த மாகாண ஆளுநருக்கு நேரடியாகவோ அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவ்வமைச்சுக்கு கீழமைந்த அலுவலர்கள் மூலமாவோ அமைச்சர்கள் சபை என்னும் தலைப்பிலுள்ள 154 (ஊ) என்ற உறுப்புரைக்கு அமைவாக பிரயோகித்தல் வேண்டும் என்கின்றது.

**உறுப்புரை 154 (ஈ). மாகாண சபையின் உறுப்பாண்மை.**

ஒரு மாகாண சபை எந்த மாகாணத்திற்காக தாபிக்கப்பட்டதோ அம்மாகாணத்தின் பரப்பளவையையும் சனத்தொகையினையும் கவனித்திலெடுத்து சட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி அல்லது ஒரு சட்டத்தை ஆக்குவதின் மூலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும். மாகாண சபையின் ஆரம்பக் கூட்டத்தில் அம்மாகாணம் கொண்டிருக்கும் இடப்பரப்பிலுள்ள தேர்தல் மாவட்டங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை சபை நடவடிக்கையில் பங்காற்றும் உரிமையை வழங்குவதற்கு தீர்மானத்தின் மூலம் முடிவெடுக்கலாம். நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் வலுவிலுள்ளபோது அம்மாகாணத்திற்கான எல்லைகளுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அச்சபையின் பதவிக் காலத்தின்போது சபை நடவடிக்கைகளில் பங்குபற்றி பேசுவதற்கும் வேறு வகையில் பங்காற்றுவதற்கும் சபையால் அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் கூட்டத்தில் பேசுவதற்கும் வேறு வகையில் பங்கேற்பதற்கும் உரிமை கொண்டவராவார்கள். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இவ்வாறான பங்குபற்றலை சேர்த்திருந்தால் வாக்களிக்கவும் உரித்து கொண்டவர்களாவார்கள். மேற்குறித்த ஏற்பாடுகள் முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் தேதியன்று நடைமுறையில இல்லாதொழிதல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

**உறுப்புரை 154 (உ) மாகாண சபையின் பதவிக்காலம்**

மாகாண சபை ஏதாவது காரணத்தினால் முன்கூட்டியே கலைக்கப்பட்டால் தவிர அதன் முதற்கூட்டத்திற்கு என நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு தொடர்ந்திருத்தல் வேண்டும். குறித்த பதவிக்காலம் முடிவடைந்ததும் சபை தானாக கலைந்ததாகச் செயற்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 154 (ஊ) அமைச்சர்கள் சபை**

ஆளுநருக்கு அவரது பணிகளைச் செய்வதற்கு உதவியும் ஆலோசனையும் வழங்குவதற்கு பிரதான அமைச்சரையும் நான்குக்கு மேற்படாத அமைச்சர்களையும் கொண்ட அமைச்சர்கள் சபை இருத்தல் வேண்டும். பிரதான அமைச்சர் சபைக்குத் தலைமை தாங்குவார். ஆளுநர் அரசியலமைப்பினால் கூறப்படுமளவுக்கு மட்டும் தனது தற்றுணிபில் எதனையும் பிரயோகிக்கலாம். மற்றும்படி அவர் அமைச்சரவையின் அத்தகைய ஆலோசனைக்கிணங்கிச் செயற்படுதல் வேண்டும். இருப்பினும் ஆளுநர் அவரது தற்றுணிபுப்படி சேவையாற்ற தேவைப்பட்ட விடயமா இல்லையா எனப் பிரச்சினை எழுந்தால் ஆளுநரின் முடிவு இறுதியானது என்பதுடன் ஆளுநரால் செய்யப்பட்ட எதிலும் செல்லுபடியாண்மை பற்றி நீதிமன்றம் கேள்விக்குட்படுத்தல் ஆகாது எனவும் ஆளுநரின் தற்றுணிபு பிரயோகித்தல் சனாதிபதியின் பணிப்பின் மீதானாக வேண்டும்.

அமைச்சர்களினால் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதா அப்படியாயின் என்ன ஆலோசனை வழங்கப்பட்டது என்பதுபற்றி நீதிமன்றம் எதிலும் விசாரணை செய்யப்படுதல் ஆகாது. ஆளுநர் தனது அபிப்பிராயப்படி சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறக்கூடிய ஒருவரை பிரதான அமைச்சராக நியமிப்பார். ஒரு அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் அரைவாசி உறுப்பினர்களுக்கு மேற்பட இருந்தால் அக்கட்சியின் தலைவரை பிரதான அமைச்சராக நியமிப்பார். ஆளுநர் பிரதான அமைச்சரின் ஆலோசனையின் மீது உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை

நியமித்தல் வேண்டும். அமைச்சர்கள் சபை மாகாண சபைக்கு கூட்டாக பொறுப்புடையதாததும் வகை சொல்லவேண்டியதாததுமாக இருக்கும். பிரதான அமைச்சரோ அல்லது அமைச்சர்களோ பதவி ஏற்கும்போது 6வது திருத்தத்திற்கு அமைய அட்டவணை 4இல் உள்ள வாசகத்தை வாசித்து சத்தியம் செய்தோ உறுதியுரை வழங்கியோ கையெழுத்திட்டு பதவியை ஏற்கவேண்டும்.

**154எ உறுப்புரையில்** மாகாண சபை நிரல் எனக் குறிப்பிடப்படும் ஒன்பதாம் அட்டவணையில் நிரல் I பொறுப்பளிக்கப்பட்ட நிரல் எனவும் (Devolved list) மாகாண சபைக்குரியவை நிரல் II ஒதுக்கிய நிரல் எனவும் (Reserved list) மத்திய அரசுக்குரியவை நிரல் III ஒருங்கியை நிரல் எனவும் (Concurrent list) மத்திய அரசும் மாகாண சபையும் கலந்தாலோசித்து முடிவெடுக்கும் விடயங்களைக் கொண்டதாகவும் இருக்கும். இவற்றை மேலும் ஆராயலாம்.

**(தொடரும்)**